எல்லோரும் வாக்காளராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். மேலும் முக்கியமாக குடிசைப் பகுதிகளில் மக்கள் குடியேற்றமிருந்ததினால் வாக்காளர் எண்ணிக்கைக் கூடுதலாகியிருக்கிறது.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவரவர்களே, இடைத் தேர்தலுக்கு ஒரு வருடத்திற்கு முன்புதான் வாக்காளர் ஜாபிதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கிறபோது புதிதாக ஜாபிதா தயாரிக்கக்காரணமென்ன? அதற்கு எவ்வளவு செலவு ஏற்பட்டது ? அந்தச் செலவை யார் ஒப்புக் கொண்டார்கள் ? தேர்தல் கமிஷன் ஒப்புக்கொண்டிருக்கிறதா ? இந்த ஜாபிதாவில் வட சென்னையிலே இருந்தவர்கள் பலர் தென் சென்னையிலே சேர்க்கப்பட்டார்கள் என்றும், பலர் ஜாபிதாவிலிருந்தே நீக்கப்பட்டார்கள் என்றும், புகார் இருக்கிறது. அரசாங்கம் அதற்கு என்ன பதில் சொல்லுகிறது ?

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** நண்பர் சொன்னது அவ்வளவும் புகார்கள்தான்.

**திரு. எம். எத்திராஜிலு :** நகரசபைத் தேர்தலுக்கு முன்பு வட சென்னை வாக்காளர் ஜாபிதாவை திருத்தியமைக்க அரசாங்கத்தில் ஏதாவது யோசனையிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** நகரசபைத் தேர்தலுக்கு முன்னாலே என்ன செய்யலாம் என்பதைப் பற்றிப் இப்போது யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

*Secondary Grade Teachers*

* 222 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether Secondary Grade T achers who migrated from Panchayat Union Elementary Schools to Aided High Schools in this State before 1st June 1966 are eligible for the benefit of G.O. Ms. No. 365, Education, dated 15th March 1967 ; and

(*b*) if not, the reasons therefor ?

**இடைநிலை ஆசிரியர்கள்**

**திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், பஞ்சாயத்து ஒன்றிப்பு தொடக்கப் பள்ளிகளினின்று மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 1-6-66-க்கு முன் மாற்றப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் 15-3-1967 தேதியிட்ட தமிழ்நாடு அரசாங்கம் கல்வித்துறை 365-ம் எண் ஆணையின் பலனை அடையத்தகுதியுள்ளவர்களா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Tamil Pandits (Grades I and II)*

*223 *Q.*—THIRU P. ETHIRAJ : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the total number of Grade I and Grade II Tamil Pandits mployed as Tamil Teachers in the High Schools run by the Government and the private sector ;